**கருவலகஸ்வெவ பிரதேச சபை - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கருவலகஸ்வெவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கருவலகஸ்வெவ பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட நீர்மானி இருப்பின் பெறுமதி ரூபா 1,603,574 அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அதிகரித்துக் காண்பிக்கப்பட்ட நீர்மானி இருப்பின் பெறுமதி திரண்ட நிதியத்திலும், நீர் களஞ்சிய இருப்பு கணக்கிலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது முற்செலுத்தப்பட்ட காப்புறுதி செலவினமாக இனங்காணப்பட்ட ரூபா 217,252 மீளாய்வாண்டின் போது செலவினமாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஆண்டின் காப்புறுதி செலவினக் கணக்கு அப் பெறுமதியால் குறைத்தும் முற்செலுத்தப்பட்ட காப்புதி செலவினக் கணக்கு அதிகரித்தும் நிதிப் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | முற்செலுத்தப்பட்ட காப்புறுதி செலவினப் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டின் இறுதியில் முற்செலுத்தப்பட்ட காப்புறுதித் தொகை திரண்ட நிதியத்திலும், முற்செலுத்தப்பட்ட காப்புறுதி செலவினக் கணக்கிலும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் தொடர்பான கூற்றில் மீளாய்வாண்டின் இறுதியில் திரண்ட நிதியத்தின் பெறுமதி ரூபா 9,481,983 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 14,427,292 ஆக ரூபா 4,945,309 அதிகரித்துக் காண்பிக்கப் பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்பட்டாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிடைக்க வேண்டிய 02 கணக்கு மீதிகள் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி ரூபா 14,223,860 மற்றும் பட்டோலையின் பிரகாரம் மீதி ரூபா 13,960,840 ஆன மையால் இந்த இரண்டு மீதிகளுக்கிடையே ரூபா 263,020 வேறுபாடு அவதானிக் கப்பட்டது. | புதிய CAT 2020 தரவு முறைமையின் மூலம் மீதியினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இணங்காமைகளைப் பரீட்சித்து சரியாக கணக்குகள் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 என்ற அரச நிருவாக சுற்றறிக்கை | | | |
| 3.1 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சபையின் 07 வாகனங்களின் எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை. | இதற்காக இயந்திரப் பொறியியலாளரின் உதவியினை வழங்குமாறு கோரப்பட்டிருந்ததுடன் அவரால் தினமொன்று வழங்கி உடனடியாக அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் வ.ப.பா.தே/01/11/04/01 என்ற வடமேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்கள சுற்றறிக்கை. | மதிப்பீட்டு அறிக்கை யொன்று பெற்றுக் கொள்ளாமல் 2022 ஆம் ஆண்டு முதல் தப்போவ ஆலய சந்தி கடைகள் ரூபா 750 மாதாந்த வாடகைத் தொகையில் வழங்கப்பட்டிருந்தது. | விரைவாக அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடை மேற்கொண்டு அதன் பின்னர் மதிப்பீட்டுப் பெறுமதியில் குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,633,674 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,769,980 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 13,852 | 11,975 | 7,010 | 3,418 | 9,814 | 11,306 | 9,182 | 3,204 |
| ii. | வாடகை | 3,005 | 1,951 | 1,923 | 672 | 2,939 | 2,019 | 1,851 | 641 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 444 | 234 | 234 | - | 162 | 172 | 172 | - |
| iv. | ஏனைய வருமானம் | 13,863 | - | 5,622 | - | 11,326 | - | 1,926 | - |
| | மொத்தம் | 31,164 | 14,160 | 14,789 | 4,090 | 24,241 | 13,497 | 13,131 | 3,845 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| i. மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 524,780 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 வருடங்களுக்கு குறைந்த ரூபா 365,907 நிலுவை மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 158,873 நிலுவை மீதியும் காணப்பட்டது. | மேலும் அறவிட வேண்டிய ரூபா 524,780 நிலுவை ஆதன வரித் தொகையை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரி விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| ii. 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதன வரி மீள் திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆதன வரி மதிப்பீட்டின் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டிலும் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டு முதல் அவ் வப்போது புதிய மதிப்பீட்டிற்காக கோரிக்கைவிடப்பட்டதுடன் 2025 ஏப்ரல் 21 ஆம் திகதி முதல் புதிய ஆதனவரி மதிப்பீட்டை மேற்கொள்ளல் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. | கால ரீதியில் ஆதனவரி மீள் திருத்தம் மேற்கொண்டு அதன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை ரூபா 401,668 அக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு மேற்பட்ட 05 | மிகுதி நிலுவை கடை வாடகை மீதியான ரூபா 401,468 தொகையை அறவிடுவதற்கு தேவையான மிகுதி | நிலுவை வாடகையை விரைவாக அறவிடப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்கு குறைந்த ரூபா 26,107 நிலுவை மீதியும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 141,361 நிலுவை மீதியும் காணப்பட்டது. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புறநெகும செயற்திட்டத்தின் மூலம் 2023 திசம்பர் மாதம் ரூபா 637 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட நீர் செயற்திட்டம் ரூபா 5,843,110 பெறுமதியான 1000 நீர்மாணியுடன் சபைக்கு கையளிக்கப் பட்டிருந்தது. இந்த நீர் செயற்திட்டத்தின் மூலம் 167 நுகர்வோர்களுக்காக மாத்திரம் நீர் இணைப்பு வழங்கப்பட்டதுடன் 2025 மார்ச் 31 ஆம் திகதி வரையில் ரூபா 4,873,170 பெறுமதியான 834 நீர் மாணிகள் களஞ்சியத்தில் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | நீர் செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட பிரகாரம் நீர் இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.ள |
| (ஆ) | 02 கடைகளின் நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்காக சபையினால் நீதிமன்றத்தில் தொடரப் பட்ட 02 வழக்குகளுக்காக தீர்ப்புக் கிடைத்திருந்த போதிலும் தீர்ப்பின் பிரகாரம் வழக்கு கட்டணத்தை உள்ளக்கி ரூபா 243,422 நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொண்ட சட்டத்தரணிக்கு 2025.02.24 ஆம் திகதிய எழுத்து மூலம் தகவல்கள் கோரப்பட்ட துடன் நிலுவை வாடகைப் பணம் மற்றும் அதற்குரிய வழக்கு கட்டணங்களை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் நிலுவைப் பணம் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 2,921,929 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களை விஞ்சிய மீதிகளின் பெறுமதி ரூபா 855,314 ஆகும். இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதியான ரூபா 523,159 தொகை பல வருடகாலம் முதல் முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அந்த தொகையை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. எதிர்காலத்தில் உள்ள மீதிகளைத் தீர்த்து | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவிடுவவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறுசெலுத்த வேண்டிய 02 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,871,160 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 613,320 மீதியும் காணப்பட்டது. நிலுவை மீதிகளின் இருப்பை உறுதிப்பத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகளை உறுதிப்படுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பை உறுதிப்படுத்தி தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான ரூபா 25,207,560 பெறுமதியான 05 சொத்துக்கள் 04 வருடங்களுக்கும் 10 வருடங்களுக்கும் கிடையிலான காலம் முதல் விளைவற்றுக் காணப்பட்டது. | தம்போவ வாராந்த சந்தையின் நிலம் கல்வி நிலைய மொன்றாக தற்போது பேணிச் செல்லப்படுவதுடன் வீரபுர வாராந்த சந்தை பொருத்தமான புதிய செயற் திட்டமொன்றிற்காக ஈடுபடுத்து வதற்கு ஆராயப்படுகின்றது. புறநெகும நீர்செயற்திட்டத்தி யிலிருந்து நீரைப் பெற்று சுத்திகரித்து பிரதேச மக்களுக்கு சலுவை விலையின் கீழ் நீரை வழங்கும் செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீல வெம்ம செயற்திட்டத்தின் மிகுதி வேலை நடவடிக்கைகளை உள்ளடக்கிய புதிய செயற்திட்ட முன்மொழிவொன்று 2025 மே 02 ஆம் திகதி வட மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சபையின் சொத்துக்களை எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் ரூபா 3,945,375 செலவில் கூட்டுப்பசளை தளமொன்று நிர்மாணிக்கப்பட்ட போதிலும் ஆரம்பத்திலிருந்து சேதனப் பசளை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப் படல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை பயன்படுத்துகின்ற இரண்டு வாகனங்கள் மற்றும் ஒரு மோட்டார் சைக்கிள் என்பவற்றின் உரித்து மற்றும் சபையினால் நிருவகிக்கப்படுகின்ற மற்றும் பராமரிக்கப்படுகின்ற முன்பள்ளி பாடசாலைகள், மயான நிலங்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் | காணிகளின் உரித்தைக் கையேற்பதற்கு கருவெல கஸ்வெவ பிரதேச செயலாளரால் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஜீப் வண்டி மற்றும் கெப் வண்டியை கையளிக்குமாறு கோரப்பட்டுள்ளதுடன் மோட்டார் சைக்கிள் வட மேல் மாகாண நீர் | சபைக்குச் சொந்தமான சொத்துகளின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அமைந்துள்ள காணிகளை உள்ளடக்கி 63 காணிகளின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை. | வழங்கல் மற்றும் சுற்றாடல் சுகாதார பிரிவிற்கு வழங்குவதற்கு 2019 சனவரி 16 ஆம் திகதிய கடிதம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் இரண்டாம் தரத்தில் 12 பதவிகளும், ஆரம்ப தரத்தில் 06 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | சபையின் உத்தியோகத்தர் வெற்றிடயங்கள் தொடர்பாக 2024 யூலை 02 ஆந் திகதி உள்ளுராட்சித் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்ககளை நிரப்புமாறு சபையின் பணிகள் தாமதமின்றி நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 93,240 இடர்கடன் தொகை மற்றும் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 4,425 முற்பணத் தொகை என்பன மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஒரு உத்தியோகத்தரின் மிகுதி இடர் கடன் மீதியை ஒரே தடவையில் செலுத்தி தீர்க்குமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் சேவையை விட்டுச் இரண்டு உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்து விரைவாக முற்பணத் தொகையை செலுத்துமாறு அறிவித்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 03 செலவின விடயங்களின் கீழ் மூலதன செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 7,650,000 ஆன மொத்த நிதி எற்பாடும் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட் டிருக்கவில்லை. | இந்த செலவின விடயங்களின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதி எற்பாடுகள் எதிர்காலத்தில் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமானதாக ஈடுபடுத்தப்படும். | வருடாந்த மதிப்பீட்டை மேற்கொண்டு வேலை விடயங்களை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய 05 விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 13,385,000 ஆன நிதி ஏற்பாடுகளில் ரூபா 2,604,625 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் 77 சதவீத வீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | இந்த செலவின விடயங்களின் மூலம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாடுகள் எதிர்காலத்தில் உரிய பணிகளை நிறைவேற்றுவதற்காக ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்படும். | வருடாந்த நிதி ஏற்பாடு குறித்துரைத்த காலத்தில் நிறைவேற்றி பொது மக்களுக்கு சிறந்த சேவையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ''ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' இன் பிரகாரம் சபையினால் 2024 ஆம் ஆண்டிற்காக 05 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் 06 இலக்குகள் இனங் காணப்பட்டிருந்ததுடன் இலக்குகளை நிறை வேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது 14 செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. உட்கட்டமைப்பு வசதிகளை கட்டியொழுப்பில் நோக்கை நிறைவேற்று வதற்காக எந்தவொரு செயற்திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இனங்காணப்பட்ட நிலை பேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |